REGD. NO. M. 6511 ★ தனிப்பிரதி 0—1—0 (7 காசுகள்) ★ வெளிநாட்டில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

சோம்பேறிகளைத் திருத்த பள்ளிக்கூடம்

வேலையற்றிருக்கும் பிற்போக்குவாதிகள், வேலைதந்தாலும் போகமறுக்கும் சோம்பேறிகள், மற்றும் நடோடிகளை எல்லாம் உடலுழைப்பு மூலம் திருத்துவதற்கான பள்ளிக்கூடம் ஒன்றை சென்னை சர்க்கார் நிறுவும் என்று கூறப்படுகிறது.

'தகுதியான வேலைக்கு, இவர்களைப் போன்றவர்களைத் தயாரிப்பதே, பள்ளியின் நோக்கமாயிருக்கும்' என்றும் கூறப்படுகிறது. குறிப்பிட்ட இடத்தில் சென்று வேலைசெய்ய மறுப்பவர்களை, சர்க்கார் வேறெந்த இடத்திலும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளமாட்டார்கள் என்றும், அவர்களுக்கு வேறு வேலை தேடித்தருவதிலும் உதவமாட்டார்கள் என்றும் சர்க்கார் தெரிவித்திருக்கிறதாம்.

மலர் 5] சென்னை: ஆடி 22உ செவ்வாய் (6—8—57) ★ ★ வெளியீடு: ஆடி 23உ புதன் (7—8—57) [இதழ் 44

தெளிவான அறிவிப்பு இன்றி முடிவு மாறாது

தபால் ஊழியர் தலைவர் கண்டிப்பு

வேண்டுகோள் விடுக்கும் பண்டித நேரு கோரிக்கைகள் பற்றி மழுப்புகிறார்

பண்டித பந்தின் முரட்டுப் பேச்சு பலன் தருமா?

தபால் ஊழியர் வேலைநிறுத்த நிலை விளக்கம்

"எங்கள் கோரிக்கைகள்பற்றி திட்டவட்டமான அறிவிப்புகள் தரப்பட்டாலன்றி, நாங்கள் வேலைநிறுத்த முடிவைக் கைவிடுவதற்கில்லை" என்று, தபால் ஊழியர் சங்கத் தலைவர் தால்வி தெரிவித்திருக்கிறார்.

பண்டிதரின் வேண்டுகோளுக்குப் பதில் தரும் வகையில் அவர் மேற்கண்ட தகவலைத் தந்துவிட்டு மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"தலைவர் பெயரை மட்டும் தெரிவித்து, விசாரணைக் கமிஷன் நியமனம்பற்றி நிதி மந்திரி பேசியிருக்கிறார்; பண்டித பந்த், அத்தியாவசிய சர்வீசுகள் மசோதாவை மக்கள்சபையில் தாக்கல் செய்துள்ளார்; வானொலி மூலம் பண்டிதர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

"இவர்கள் எல்லாம், ஊழியர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட வேண்டும் என்பதையே மையமாக வைத்துப் பேசுகிறார்கள்.

"ஆனால் ஊழியர்களின் கோரிக்கைகள் பற்றி தெளிவான அறிவிப்புகள் எதையும் காணோம்.

"சம்பளவிகிதம், பஞ்சப்படி உயர்வு, பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்துடன் இணைத்தல், நல்ல வசதிகள், தொழிற்சங்க உரிமைகள் இவை போன்ற ஊழியர்களின் எல்லாப் பிரச்சினைகளையும் ஆராயக்கூடிய விரிவான அதிகாரம்படைத்த ஒரு உண்மையான சம்பளக் கமிஷன் வேண்டும் என்பதே ஊழியர்களின் கோரிக்கையாகும். ஆனால் உண்மையில் இன்று சர்க்கார் அறிவித்திருக்கிற சம்பளக் கமிஷன், குறிப்பிட்ட அதிகாரம் படைத்த ஒருமுடமான கமிஷனின் அதிகாரங்கள், 'சம்பளக் கமிஷனும், உத்தேச விகிதங்களை மாற்றக் கூடாது; பஞ்சப்படியை உயர்த்தக்கூடாது' என்பன போன்ற நிபந்தனைகளுடன் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் கமிஷனில், ஊழியர்களின் பிரதிநிதிக்கு, இடமிருக்கிறதா என்பதும் தெளிவு படுத்தப்படவில்லை. இடைக்கால நிவாரணம் பற்றி வாயளவில்தான் உறுதிமொழிகள் தரப்பட்டிருக்கின்றனவே தவிர, கமிஷன் அதற்கு அதிகாரம் படைத்திருப்பதாகத் தெரிவிக்கவில்லை.

"மேலும், இடைக்கால நிவாரணம் என்பது, கமிஷன் அறிக்கை வருவதற்கிடையில் உடனடியாகத் தரப்பட வேண்டிய உதவியாகும்.

"சர்க்கார் தங்களின் நல்லெண்ணத்திற்கு அறிகுறியாக, தங்களால எந்த அளவு உதவ முடியும் என்பது குறித்துத் தெரிவிக்கவேண்டும்.

"1949-ல், இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் நானும், திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனும் பண்டித நேருவைச் சந்தித்த போது, அவர், நாங்கள் கேட்டது ரூ. 35 என்றாலும், ரூ. 10 தர சம்மதித்தார்; நாங்களும் ஒப்புக்கொண்டோம். அது போல இப்போதும் சர்க்கார் தங்கள் நல்லெண்ணத்தைக் காட்டவேண்டும்.

"மேலும், விவாதத்திலிருக்கும் அத்தியாவசிய சர்வீஸ் மசோதாவை சர்க்கார் உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்."

என்ற இந்த மூன்று நிபந்தனைகளை தால்வி அறிவித்திருக்கிறார்.

நேரு வேண்டுகோள்

"சர்க்கார் அறிவித்துள்ள விசாரணைக் கமிஷன், ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிப்பது பற்றியும், ஒரு இடைக்கால அறிக்கை தரமுடியும்; இதைத் தவிர வேறு என்னதான் நாங்கள் செய்ய முடியும்? இதற்குப் பிறகும் சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்த முடிவைக் கைவிட்டு விட்டால், நாங்கள் வெறும் பார்வையாளர்களாக இருக்க முடியாது; வேலை நிறுத்தம் இல்லை என்றால், உத்தேச அத்தியாவசிய சர்வீஸ் மசோதாவும் அமுலுக்கு வராது; எனவே, முடிவைக் கைவிடுங்கள்; மக்களுக்கு ஏற்படக்கூடிய பெருந்தொல்லையைத் தவிருங்கள்"

என்று, பண்டித நேரு, வானொலி மூலம் கேட்டிருக்கிறார்.

பண்டித பந்த் முரட்டுப் பேச்சு

ஊழியர்களின் போக்குத் தவறானது என்றும், தற்கொலைக்கு ஒப்பானது என்றும் பண்டித பந்த், மக்கள்சபையில் அத்தியாவசிய பணிகள் மசோதாவினைத் தாக்கல் செய்யும்போது முரட்டுத்தனமாகப் பேசியிருக்கிறார்.

இடைக்கால நிவாரணம் அளிப்பது என்பது மிகவும் சிக்கலான விஷயம் என்று அவர் கூறினாராம்.

இந்த மசோதாவை காங்கிரசார் ஆதரித்த போதிலும், எதிர்க்கட்சியினர். பலரும் வன்மையாகக்கண்டித்திருக்கின்றனர்.

மந்திரிகள் எழுப்பிய எந்தக் கேள்விக்கு நாங்கள் விடை பகராமல் விடுத்தோம்?

ஒரு தவறைத் திருத்த மற்றொரு தவறு இழைப்பதா?

சென்னைக் கூட்டத்தில் அண்ணா

சென்னை 27-வது வட்ட தி. மு. க. ஆண்டுவிழாவில் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் மறுபகுதி இங்கு தரப்படுகிறது :—

"வறண்ட தலையுடைய மக்கள் மேலும் வரிப்பளுவைத் தாங்க முடியவில்லை; அவர்கள் வாழ்வு வளம்பெற மார்க்கமில்லை இன்றைய ஆட்சியில்! போலீஸ்காரர்களுக்கு சம்பளத்தில் மேலும் ரூ. 5 கூட்டிக்கொடுத்தால், அதை அவர்கள் வீட்டிலே பெட்டியில் வைத்துப் பூட்டியா வைத்துவிடுவார்கள்? ஏழை வீட்டில் பெட்டி ஏது? ஏதோ கல்யாணத்துக்கு வாங்கிய ஒரு டிரங்குப் பெட்டி இருக்கலாம்—அதுவும் காது ஒடிந்து இருக்கும்!

"ஏழைகளிடம் கிடைத்த பணம் கடை வீதிக்கு வந்து சேரும்; அந்தப் பணம் இன்னொரு தொழிலாளியிடம் போய்ச் சேரும்; அவனிடமிருந்து அது இன்னொரு குடிசைக்குப் போகும்; பணம் ஓரிடத்தில் இல்லாமல் உருண்டோடக் கூடியது. அதனால்தான் பணக்காரர்கள் பணத்தைக் காகிதமாக மாற்றிக் கட்டிப்போடுகிறார்கள். ஏழையின் கையில் ஒரு 5 ரூபாய் வந்தால் அது சலவைத் துணி உடுத்துவதற்கும், ஒரு நாள் சந்தோஷமாகச் செலவு செய்வதற்கும் உபயோகப்படுகிறது. இதைப் பார்த்து இன்னொருவன், 'என்னப்பா இன்று ஏகதடபுடல்?' என்று கேட்டால், 'ரூ. 5 அப்பா; சும்மாயிரு' என்கிறான்; எனவே, பணக்காரனின் கையில் பணம் இருக்கவிடாமல் வைத்தால்தான் பணம் பரவி நிற்கும்.

"மார்வாடிகள் வீடுகளில் பார்த்தால் கொழுத்துப் பருத்த மார்வாடியின் உடலை ஒரு தொழிலாளி குத்திக் கொண்டிருப்பான்; 'ஏன் அப்படிச் செய்கிறான்' என்றால் 'மார்வாடியின் உடம்பில் சதை பரவலாக இருக்க வேண்டும் என்பதற்காக' என்று சொல்லுவார்கள்!

"மார்வாடியைக் குத்தி சதையைப் பரவலாக்குவதுபோல, பணத்தையும் பரவலாகப் பரவவிடவேண்டும். பணம், வரண்ட தலையும், இருண்ட வாழ்வும் உள்ள ஏழை மக்களைப் பார்த்தால் போதும்!

"இலாபத் தொழில்களையெல்லாம் தனிப்பட்டவர்களிடம் விடக்கூடாது; சர்க்கார் மேற்பார்வையில் நாட்டின் பொது உடைமையாக்கப்பட வேண்டும்; இலாபம் ஏழை மக்களுக்குக் கிடைக்கவேண்டும்.

இந்த நாட்டு அரசாங்கத்தை இடித்துக்காட்டி எதிர்த்துப் பேசி அதன் மூலம்தான் நல்ல காரியத்தைச் செய்ய வைக்கவேண்டியுள்ளது. அரசாங்கம் தாமாக எதையும் செய்ய முன்வருவதில்லை.

"நாங்கள் நேர்மைக்காகப் பாடுபட்டுவருபவர்கள். தி. மு. கழகத்தின் நடவடிக்கைகளைக் கண்டு ஆட்சியாளர்கள் திண்டாடுகிறார்கள்—திணறுகிறார்கள்—திகைக்கிறார்கள்; ஆனால் அதே நேரத்தில், எங்களைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் சிலர் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? 'இந்த தி. மு. கழகத்தார் சட்டசபையில் மந்திரிகளின் கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியாமல் விழிக்கின்றனர்' என்கிறார்கள். யார் கேள்விக்கு யார் பதில் சொல்லுவது?

"மந்திரிகளை உறுப்பினர்கள் கேள்வி கேட்பதுதான் சட்டசபைமுறை. உறுப்பினர்களைப் பார்த்து, மந்திரிகள் கேள்வி கேட்பது என்பது சட்டசபையில் நடக்கும் முறையல்ல; எனவே, நாங்கள்தான் கேள்விகளை எழுப்புபவர்கள். எங்கள் கேள்விகளுக்குத்தான் மந்திரிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

மாயூரம் தொகுதி தேர்தல் வழக்கு

தி. மு. கழக அபேட்சகருக்கு வெற்றி!

காங்கிரஸ்காரர் தேர்தல் செல்லாதெனத் தீர்ப்பு!

மாயூரம், ஆக. 6—

மாயூரம் தொகுதி தேர்தல் வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அந்தத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ்காரரான திரு. ஜி. நாராயணசாமி நாயுடு அவர்களின் தேர்தல் செல்லத்தக்கதல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

கழக அபேட்சகர் தோழர் கிருஷ்ணமூர்த்தி தொடுத்திருந்த இந்த வழக்கு, நாகப்பட்டினம் கீழத் தஞ்சை மாவட்ட நீதிபதியான ஜனாப் குன்னுஹமத்குட்டி அவர்களால் (தேர்தல் டிரிபியூனல்) விசாரிக்கப்பட்டு வழக்கில் கழக அபேட்சகருக்கு வெற்றி கிட்டியிருக்கிறது.

கடந்த பொதுத் தேர்தலின் போது மாயூரம் தொகுதிக்கு (பொது) தோழர் குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தி. மு. கழக அபேட்சகராக நியமனப் பத்திரம் தாக்கல் செய்திருந்தார்.

அவர், இந்திய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவன அதிகாரியாயிருப்பதால் அவர் ஒரு சர்க்கார் அதிகாரி என்ற காரணம் காட்டி அந்த அபேட்சை மனுவை காங்கிரஸ் அபேட்சகர் எழுப்பிய ஆட்சேபத்தின் பேரில் தேர்தல் அதிகாரி தள்ளிவிட்டார்.

இதனை ஆட்சேபித்து நமது அபேட்சகர் தோழர் கிருஷ்ணமூர்த்தி, அந்தத் தொகுதிகளில் வெற்றி பெற்ற காங்கிரஸ்காரர்களான ஜி. நாராயணசாமி நாயுடு (பொது), பி. ஜெயராஜ் (தனி) ஆகிய இருவரின் தேர்தலும் செல்லத்தக்கதல்ல எனத் தீர்ப்பளிக்குமாறு வழக்குத் தொடுத்தார்.

வழக்கை விசாரித்த தேர்தல் நீதிமன்றம், கழக அபேட்சகரின் மனுவை ஏற்றுக்கொண்டு பொதுத் தொகுதியில் வெற்றி பெற்ற ஜி. நாராயணசாமி நாயுடு அவர்களின் (காங்) தேர்தல் மட்டும் செல்லாதென நேற்று மாலை தீர்ப்புக் கூறியுள்ளார். (ந. கி.)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—8—57 செவ்வாய்

நாட்டில் காட்டாட்சி!

“தொழிலாளர்கள் பெற்றுள்ள சிறப்பான உரிமைகளில் ஒன்ருக இருப்பது வேலைநிறுத்த உரிமையாகும்.

“இவ்வுரிமையின் காரணமாகத் தான் உலகில் தொழிற் சங்கங்கள் வளர்ச்சி பெற்றன; தொழில்களும் முன்னேற்றம் அடைந்தன.

“எனவே, இவ் வேலைநிறுத்தக் கருவியைத் தொழிலாளர்கள் பற்றிக்கொண்டிருப்பதை நான் நன்ருக உணர்ந்திருக்கின்றேன்.”

இவ்வாறு வேலைநிறுத்தத்திற்கும் தொழிலாளர்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை இந்தியப் பிரதமர், எவரும் பாராட்டத்தகுந்த முறையில் விளக்கியிருக்கிருர். அதுவுமன்றி அந்த அற்புதமான வேலைநிறுத்தக் கருவி உலகத்தில் தொழிற்சங்கங்கள் வளர்ந்தோங்குவதற்கும், அதே நேரத்தில் தொழில்கள் ஆக்கம் பெறுவதற்கும் புரிந்துள்ள பெரும் பணியையும் அவர் தெளிவுபட எடுத்துரைத்துள்ளார். அதுபோன்றே வேலைநிறுத்தக் கருவியை தொழிலாளர்கள் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருப்பதில் உள்ள நியாயத்தையும் தாம் திட்டவட்டமாக உணர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

“ஒரு அரசாங்கம், அரசாங்கமாக இருக்கின்ற ஒரு காரணத்தினுலேயே, அறிவுடைமை அனைத்தையும் செயலாற்றும் தலைமையாக ஆகிவிட்டாது. இதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஒரு அரசாங்கமானலும், மற்றவர்களைக் கலந்துகொள்ளாது, எல்லாப் பிரச்சினைகளிலும் தனக்குத் தானே தீர்மானித்துக்கொள்ளலாம் எனக் கருதுவதானது, தவருன முறையை மேற்கொள்ளுவதேயாகும். மக்களாட்சி அமைப்பில், மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பதாகவே ஒரு அரசாங்கம் இருந்து தீரவேண்டும்.”

ஒரு அரசாங்கத்தின் இலட்சணம குறித்து வரையறுத்துப் பேசியிருக்கின்றவர் யார் என எண்ணுகிறீர்கள்? இதுவும் அதே இந்தியப் பிரதமர் வேலைநிறுத்தம் குறித்து விளக்கம் தந்த அதே நேரத்தில் தந்துள்ள செம்மொழியாகும்.

வேலைநிறுத்தம் குறித்தும் வேலைநிறுத்தத்தின் விளைவாக இதுவரை உலகத்தில் தொழிலாளர் சமூகம் பெற்றுள்ள நற்பயன் குறித்தும் தொழில்துறை பெற்றுள்ள பெரும் வளர்ச்சி குறித்தும் விளக்கியுரைத்ததுடன் இருந்துவிடாது ஒரு அரசாங்கத்திற்கு இயல்பாக இருந்துவரும் குறைபாடு குறித்தும், அரசாங்கம் செயல்பட வேண்டிய நேரிய முறை குறித்தும் பேராசிரியராக இருந்து நமக்கெல்லாம் தெளிவுரை தந்துள்ளார்.

அதே பேராசிரியர் நிலையிலிருந்து பண்டித நேரு, நாட்டில் உள்ள நிலையையும், மக்கள் பட்டுவரும் அவதியையும் சுட்டிக் காட்டியிருக்கின்ருர்.

அது, இது:—

“நாம் நெருக்கடியான காலத்தில் இருக்கிரேம் என்பதை உணருகிரேம். ஏதோ ஓரளவில் விலையேறி இருக்கிறது. மற்ற நாடுகளைவிட அதிருஷ்டவசமாக இங்கு குறைவாக இருக்கின்றது. விலை ஏறும்பொழுது, அதிலும் இன்றியமையா வாழ்க்கைப் பொருட்கள் விலை ஏறும்பொழுது மக்கள் அல்லலுறுவர். இப்பிரச்சினையில் நாம் கருத்து செலுத்தி, நமது மக்களையும், (அரசாங்க) ஊழியர்களையும் அழுத்திக் கொண்டிருக்கும் (விலையேற்றம்) பெருஞ் சுமையை அகற்ற முயற்சிப்பது நமது கடமையாகும். இதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். மக்கள் சங்கடத்திலிருக்கின்றனர் என்பதையும் ஒப்புக் கொள்ளுகிறேன். நாம் இது பற்றிக் கருதுவோம்.”

விலையேற்றத்தின் விளைவாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள அல்லலின் தன்மையையும், பேராசிரியரான நேரு, பிறர் விளக்க முடியாத அளவில் விளக்கியுள்ளார்.

இவ்வளவு உயர்ந்த நிலையில் நாட்டு நிகழ்ச்சிகளைத் தெளிவாக்கியுள்ள பண்டித நேரு, இந்தியப் பிரதமராக மாறி, அஞ்சல்-தந்தி ஊழியர்களின் வேலைநிறுத்தத் தயாரிப்பை ஒடுக்கக் கங்கணங் கட்டிக் கொண்டுள்ளார்.

அஞ்சல்-தந்தி ஊழியர்களின் தீர்மானப் போராட்டத்தைச் சட்டவிரோதமானதாக்க, இந்தியப் பிரதமர் சட்டமியற்றுகிருர்.

எந்த வேலை நிறுத்த உரிமைக்கும் தொழிலாளர்களுக்கும் இருக்கும் உறவுமுறை குறித்து உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவு போன்றது எனப் பிறர் கருதும்படி சிறப்பித்துக் கூறினுரோ, அதே பண்டிதர் நேரு ‘வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது’ என்ற சட்டத்தை இயற்றுவதின் மூலம், அஞ்சல்-தந்தி ஊழியர் உடலிலிருந்து வேலை நிறுத்த உயிரைப் பறித்துப் போட்டுவிட்டார்.

வேலை நிறுத்தம்பற்றி விளக்கம் தந்தவரும் ஒரே நேருதான்—வேலைநிறுத்தம் சட்டவிரோதமானது எனச் செயலாற்றுபவரும் ஒரே நேருதான்.

முன்னையவர் பேராசிரியர்—பின்னையவர் பிரதமர்.

ஒரே நேரு, தமக்குள்ள ஒரே ஒரு நாவால், ஒரே நேரத்தில் ஒன்றைப் பேசி, அதற்கு முரணுக ஒன்றைச் செய்யும் துணிவுடையவராகக் காட்சி அளிக்கின்ருர்.

அஞ்சல் ஊழியர் வேலை நிறுத்த முயற்சியை ஒடுக்க, வேலைநிறுத்தத்தை சட்டவிரோதமானது என ஆக்கும் சட்டம் நியாயமற்றது—மக்கள் கருத்துக்கு மாறுபட்டது.

இப்புதிய சட்டத்தின் மூலம் இந்தியப் பிரதமர் நேரு, நாட்டில் காட்டாட்சியைக் கண்டவராகின்ருர். நாட்டில் காட்டாட்சியைக் காண பிரதமர் நேரு மேற்கொள்ளும் முயற்சி கண்டிக்கத்தக்கது. வன்மையாகக் கண்டிக்கின்ரேம்.

மலைவாழ் மக்களின் வாழ்க்கை விவரம்

காட்சிப் பொருள்களாகக் காணலாமாம்

சென்னை, ஆக. 2—

கஞ்சம், ‘விசாகையிலுள்ள மலைவாழ் மக்களின் வாழ்க்கை விவரத்தைக் காட்டும் காட்சிப் பொருள்கள் சென்னை அரசாங்கப் பொருட் காட்சிசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு ‘கடபா’ பெண்ணின் உருவச் சிலையும் இருக்கிறது. இப்பெண் சாயந் தோய்த்த மர உரியும், ஆபரணமாக பித்தளைக் கம்பி வளையங்களும், பாசி, சிப்பி இவற்ருல் செய்த நகைகளும் அணிந்திருப்பதைக் காணலாம்.

அவர்களின் வீட்டுச் சாமான்களும் வைக்கப்பட்டுள்ளன; அந்த இனத்தவரின் முறை, புகைப் படங்களால் சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஆக. 14 முதல் அறப்போர்

‘சுதந்திர கொண்டாட்டத்தில் பங்கு கொள்ளமாட்டோம்’

‘காங்கிரஸ்மாநாட்டிற்கு ஒத்துழைப்புநல்கோம்’

அசாம் எண்ணெய்த் தொழிற்சாலை போராட்டம்

கௌஹாத்தி, ஆக. 5—

“ஆகஸ்டு 15 சுதந்திர நாள் கொண்டாட்டங்களில் பங்கு கொள்ளாதீர்!

“அடுத்த ஜனவரித் திங்களில் காங்கிரஸ் மாநாடு நடைபெறும் போது, எவரும் அங்கு செல்லாதீர்—மாநாட்டிற்கு ஒத்துழைப்புத் தராதீர்”

என்று, அசாம் எண்ணெய்த் தொழிற்சாலை போராட்டக் கமிட்டி அசாம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

மேலும் கடந்த ஜுலை 29-ந் தேதியன்று மாநிலமெங்கும் வெற்றிகரமாக பொது வேலை நிறுத்தத்தை நடத்திவைத்த இந்தப் போராட்டக் குழு, வரும் ஆக. 14-ந் தேதி முதல் மாவட்ட தலைநகர்களில் சர்க்கார் அலுவலகங்களின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தவும் சத்தியாக்கிரகம் செய்யவும் திட்டமிட்டிருக்கிறது.

டெல்லியின் முடிவு மாறும் வரை இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இராஜஸ்தான் மாணவர்கள் கிளர்ச்சி வலுக்கிறது

ஆயிரக்கணக்கில்கூடி ஆர்ப்பாட்டம்

போலீசார் கைவரிசை காட்டுகின்றனர்

ஜெய்ப்பூர், ஆக. 4—

இராஜஸ்தான் மாநிலத்தில், பள்ளிப் பயிற்சிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் நடத்திவரும் கிளர்ச்சி விரிவாகி வலுத்துவருகிறது.

கடந்த முதல் தேதியன்று போலீசார் ஜெய்ப்பூரில் மாணவர் மீது தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர் என்ற செய்தி ஏற்கனவே வெளிவந்தது.

இப்போது பல நகரங்களிலும் இந்தக் கிளர்ச்சி விரிவாகி, வலுத்துவருகிறது.

ஆள்வார் கலெக்டர் அலுவலகத்தின்முன் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்களை தடிகளாலும், கண்ணீர் வாயு குண்டுகளாலும் போலீசார் தாக்கியிருக்கின்றனர்; இதன்விளைவாக 15 மாணவர்கள் படுகாயப்பட்டனர் என்றும், போலீசாரிலும் 32 பேர் வரை காயம்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்ட அந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக, போலீசார் நான்கு பேர்களைக் கைது செய்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

ஜெய்ப்பூரிலும் மாணவர் ஊர்வலம் ஒன்று போலீசாரால் கலைக்கப்பட்டதுடன், ஆறு மாணவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிகிறது.

கௌஹாத்தியில் தொழிற்சாலை

‘சாத்தியமானதே’ என்கிருர் பிரெஞ்சு நிபுணர்

“தொழில் நுட்ப வசதி, பொருளாதாரச் சிக்கனம் இவற்றின் அடிப்படையில் பார்த்தாலும் கௌஹாத்தியில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவது சாத்தியமானதே”

என்று, பிரெஞ்சு நிபுணர் பிரிஸ்ட்ச என்பார், அசாம் பிரதேச காங்கிரஸ் கமிட்டியினரிடத்தில் தெரிவித்திருக்கிருர் எனத் தெரியவருகிறது.

இது குறித்து ஏற்கனவே அந்த நிபுணர் மாநில சர்க்காருக்கு முதற்குறிப்புத் தந்திருக்கிருர் என்றும், இன்னும் ஒரு வாரத்தில் விரிவான அறிக்கை ஒன்றைத் தருவார் என்றும் கூறப்படுகிறது.

‘ரஷ்ய ஆட்சிப்பீடம் விசித்திர நாடக மேடையாகிறது’

குருஷ்சேவ் ஸ்டாலின் ஆகிருர்?

புல்கானினுக்கும் ‘சீட்டு’ கிழிந்துவிடும்?

புல்கானின் ரஷ்யப் பிரதமர் பதவியை இன்னும் சில நாளைக்கே அனுபவிக்க முடியும் என்றும், சீக்கிரமே அவர் பதவிப் பிடத்திலிருந்து கீழிறக்கப்பட்டுவிடுவார் என்றும் யூகோ தலைநகரான பெல் கிரேடில் செய்திகள் அடிபடுகின்றனவாம்!

யூகோ தலைவர் டிட்டோவுடன் பேசசுவார்த்தை நடத்த ருமேனியா வந்த ரஷ்யத் தூதுக் குழுவில் புல்கானின் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றும், குருஷ்சேவ் மட்டுமே தூதுக் குழுவிற்கு ஏகத் தலைவராக வந்தார் என்றும் கூறப்படுகிறது.

அதேபோல, வரும் புதன் கிழமையன்று கிழக்கு ஜெர்மனி செல்லவிருக்கும் ரஷ்யத் தூதுக் குழுவிலும் புல்கானினுக்கு இடம் தரப்படவில்லை என்றும், இவை புல்கானின் அனுபவிக்கப்போகும் ‘தண்டனை’க்கு முன்னறிவிப்புகள் என்றும் கூறப்படுகிறது.

மாலடோவ், மாலங்கோவ் முதலானவர்கள் கடந்த ஜுன் திங்களில் குருஷ்சேவை எதிர்த்த ‘பாவ’த்திற்காகக் கட்சி தலைமைக் குழுவிலிருந்து துரத்தப்பட்டார்கள் அல்லவா? அப்போது, அந்த மூவருடன் புல்கானினும் சேர்ந்து கொண்டு குருஷ்சேவை எதிர்ந்ததாகவும், கடைசி நிமிஷத்தில் தான் குருஷ்சேவுடன் புல்கானின் சேர்ந்ததாகவும், இதுவே அவர் பிரதமர் பதவிப் பீடத்திலிருந்து துரத்தப்படுவதற்குக் காரணமாக அமைகிறது என்றும் பெல்கிரேட் செய்திகள் கூறுகின்றன.

அடுத்த பிரதமராக, குருஷ்சேவுடன் கடந்த மூன்ருண்டுகளுக்கு மேலாக மிக நெருக்கமாக இருந்துவரும் மிகோயன் நியமிக்கப்படலாம் என்றும் அந்தச் செய்திகள் யூகம் தெரிவிக்கின்றன.

திட்டம் தந்த பரிசுகள்!

சென், ஆக. 3—

‘திட்ட வேலைகளின் காரணமாக பணவீக்கம் ஏற்பட்டுள்ளது.’

‘வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.’

‘நாம் சேமிக்கும் அளவிற்கு அதிகமாக முதலீடு செய்வதே பணவீக்கம் ஏற்படுவதற்குக் காரணம்.’

‘விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகும்போது மத்திய வகுப்பினர் வேலைநிறுத்தங்களில் ஈடுபடுகிருர்கள்.’

‘இப்போதைய பணவீக்கத்திஞல் பலன் பெறுகிறவர்கள் மீது அதிக வரி விதித்து ஊதிய உயர்வை சரிக்கட்ட வேண்டும்.’

‘ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை; அதனுல் இறக்குமதி பொருள்களின் விலை உயர்ந்துவிடும்.’

இவ்வாறு ‘ஈஸ்டர்ன் எக்னமிஸ்ட்’ என்ற பத்திரிகையின் ஆசிரியர் தாகாஸ்டா என்பவர், கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை மீனுட்சி ஆலையின் இரண்டாவது பகுதியான தியாகேசுவரர் ஆலைத் தொழிலாளர்கள் சுமார் 2,500 பேர்களுக்கு 1956—57 ஆண்டுக்கு வெகுமதியாக சுமார் 5 மாத போனஸ் தரப்படும் என்று தெரியவருகிறது.

இதற்காக மொத்தம் ரூ. 6 இலட்சம் ஆலை நிர்வாகிகள் தரவேண்டியுள்ளதாம்.

நகர—கிராம குடியிருப்பு வசதித் திட்டங்கள்

இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகைகள் விவரம்

புதுடில்லி, ஆக 4—

தொழிலாளர் குடியிருப்பு வசதித் திட்டம், குறைந்த வருமானப் பிரிவினர்களுக்கான குடியிருப்பு வசதித் திட்டம், சேரி ஒழிப்புத் திட்டம் ஆகியவை போன்ற பலதிட்டங்களுக்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 108 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை யாவும் பிரதானமாக, நகரப் பிரதேசங்கள் பற்றியவை ஆகும்.

கிராமப் பிரதேசங்களுக்காக கிராம குடியிருப்பு வசதித் திட்டத்துக்கு ரூ. 10 கோடி; தோட்டத் தொழிலாளர்களுக்கான குடியிருப்புக்கு ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சென்னை — இராயபுரம் புதுமனைக்குப்பத்தில் புதுவரி கண்டனக்கூட்டம்

என். சீவரத்தினம், காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டனர்

சென்னை, ஆக. 3—

31—7—57 மாலை 6-30 மணியளவில், சென்னை—காசிமேடு புதுமனைக்குப்பத்தில், டில்லி சர்க்காரின் புதிய வரித் திட்டத்தைக் கண்டித்து, 1-வதுவட்ட தி. மு. கழகம், அனுதாபிகள் ஆகியோர் சார்பில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் என். சீவரத்தினம் தலைமை வகித்தார். தோழர்கள் அன்புரோஸ், வி. டி. அரசு, வே. கபிலன், காஞ்சி—கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசினர்.

தோழர் என். சீவரத்தினம் அவர்கள் தலைமையுரையில் கூறியதாவது :—

“நேரு அவர்கள் வெளிநாடுகளில், ‘இந்தியாவில் வெற்றிகரமாக ஜனநாயகத்தை நிலைநாட்டிவிட்டோம்’ என்று கூறிப் பெருமைப்படுகிருர்; ஆனல் அதே நேரத்தில், மக்கள் குரலுக்கு மதிப்பு அளிக்காமல், ஏழை எளிய மக்கள்மீது வரியைப் போட்டு, வாட்டி வதைக்கிருர். நாட்டில் இன்றையத் தினம் போடப்பட்டுள்ள 112 வரிகளில், 96 வரிகள் ஏழை மக்களை மறைமுகமாகப் பாதிப்பவை. மற்ற ஒரு சில வரிகளே பணக்காரர்களைப் பாதிப்பன; ஆகவே, ஏழைகளைப் பாதிக்கும் வரிகளை அகற்றிவிட வேண்டும்.

“சட்ட மன்றத்திற்கு அண்ணா அவர்கள் நுழையும்போது, மக்கள் காட்டிய ஆர்வமும், காமராசர் நுழையும்போது நிலவிய அமைதியும், நாம் ஜனநாயக இயக்கத்தார் என்பதற்குப் போதிய சான்ருகும். மக்கள் நம்மை வரவேற்ற காட்சி ஒன்றே நாம் மக்கள் ஆதரவைப் பெற்றவர்கள் என்பதை நிரூபித்தது” என்று கூறி, சட்டமன்றத்தில் நம் தோழர்கள் ஆற்றிவரும் பணியினை விளக்கினர்.

பின்னர், தோழர்கள் அன்புரோஸ், வி. டி. அரசு ஆகியோர் புதிய வரிகள் தென்னாட்டைப் பாதிக்கும் விதத்தையும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தால் தென்னாட்டிற்குப் பயன் ஒன்றும் இல்லை என்றும், இந்தத் திட்டத்திற்காகத்தான் நாம் வரிசெலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம் என்றும் குறிப்பிட்டனர்.

தோழர் வே. கபிலன் அவர்கள் பேசும்போது, “டி. டி. கே. நேர்மையானவராய் இருந்திருந்தால், தேர்தல் நேரத்திலேயே மக்களிடம் தாம் விதிக்கவிருக்கும் வரிகளைக் கூறி ஓட்டு கேட்டிருக்க வேண்டும் என்றும், ஆனல், அதற்கு மாருக வெற்றிக்குப் பின்னரே வரிவிதித்திருக்கிருர் என்றும், நாட்டின் நிலையை உணராமல் விதிக்கப்பட்ட வரி என்றும் குறிப்பிட்டார்.

பின்னர், தோழர் காஞ்சி கல்யாணசுந்தம் அவர்கள் பேசியதாவது :—

“பணக்காரர்கள்மீது போடப்பட்டுள்ள வரிகள் 16; ஆனல், அவர்கள் இந்த 16 வரிகளைக் கொடுக்காமல் ஏமாற்ற எத்தனை கணக்குகள் வேண்டுமானலும் தயாரித்துக்கொண்டு சர்க்காரை ஏமாற்ற முடியும். ஆனல் ஏழை மக்களோ தங்கள்மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளை, தாங்கள், பொருள் வாங்கக் கடைக்குச் செல்லும் போதெல்லாம் செலுத்தியே ஆக வேண்டும்.

“இங்குள்ள சர்க்கார் எந்த வித அதிகாரமும் இல்லாத நிலையில் செயல்படுகிறது; சாதாரண வரி விதிக்கக்கூட டெல்லியைக் கலந்துகொண்ட பின்னரே விதிக்க வேண்டும். இதை நாம் சட்ட மன்றத்தில் எடுத்துரைத்தால் ‘நாசக் கூட்டம்’ என்று ‘மதிமிக்க’ நிதிமந்திரி கூறுகிருர்.

ஆனல், அதே நேரத்தில் தங்கள் கடந்த கால சரித்திரத்தை மறந்து பேசுகிருர்.

“1942-ல் ஆகஸ்டு போராட்டம் என்ற பெயரால், சாதாரண மனிதப் பண்பையும் மறந்து இவர்கள் செய்த நாசச் செயலை நாட்டு மக்கள் நன்கு அறிவர். ஆனல், மந்திரியார் நம்மை ‘நாசக் கூட்டம்’ என்று கூறுகிருர்.

“ஒரு பக்கம் பஞ்சசீலம்—ஆனல், மறுபுறம் ரூ. 202 கோடியாக இருந்த இராணுவச் செலவு ரூ. 253 கோடியாக உயர்த்தப்படுகிறது. என் இவ்வளவு இராணுவச் செலவு? இதைக் குறைத்துத் திட்டத்தை நிறைவேற்றலாமே !”

“நம்மிடம் இருக்கும் வசதிகளோ மிகக் குறைவு; ஆனல் தீட்டப்பட்டிருக்கும் திட்டமோ சக்திக்கு மீறியது. சக்திக்கு மீறிய செயல் சரியானதுதானு? நாட்டு மக்கள் முதல் ஐந்தாண்டு திட்டத்தால், ஏதாவது பயன் பெற்றனரா என்ருல், இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, விலைவாசி உயர்வு ஆகியவை நீடிக்கிறது—குறைந்ததாகக் காணேம். ஆகவே திட்டம் சரியானபடி பலன் தரவில்லை என்று காணப்படுகிறது”

தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்தது.

எடகீழையூரில் தி. மு. கழகத் துவக்கவிழா

என். வி. நடராசன், மன்னை நாராயணசாமி கலந்துகொண்டனர்

மன்னார்குடி அடுத்த எடகீழையூர் தி. மு. கழகத் துவக்கவிழா 13—7—57 அன்று ஒரு சிறு மாநாடுபோல நடந்தேறியது. எடமேலையூர், எட அன்னவாசல், பருத்திக்கோட்டை, செருமங்கலம், வடுவூர், கட்டக்குடி, மன்னார்குடி, ஆகிய ஊர்களிலிருந்து உழவர்களும், கழகத் தோழர்களும் கழகக் கொடிகளை ஏந்தி அணிவகுத்து எடகீழையூர் வந்து சேர்ந்தனர்.

பல இடங்களில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் மன்னை-நாராயணசாமி, மேலையூர் நாராயணசாமி, மன்னை நகரச் செயலாளர் பால கிருஷ்ணன் ஆகியோர் கழகக் கொடிகளை ஏற்றிவைத்தனர்.

மாலை 6-30 மணிக்கு துவக்க விழா தோழர் நா. ப. நடராசன் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப்பின், மேலையூர்-நாராயணசாமி, மன்னை-நாராயணசாமி ஆகியோர் பேசினர்.

இறுதியாகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கைகளையும், ஆற்றியுள்ள பணியினையும், சட்டசபைத் தேர்தலில் கழகத்திற்கு மக்கள் அளித்த ஆதரவையும், காங்கிரஸ் ஆட்சியின் நிர்வாக ஊழலைப் பற்றியும் விளக்கமாகப் பேசினர். பல கிளைகளின் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

சென்னை 27-வது வட்ட தி. மு. க. ஆண்டுவிழா

அண்ணா, என். வி. நடராசன் ஆகியோர் கலந்துகொண்டனர்

சென்னை, ஆக. 5—

சென்னை 27-வது வட்டம் தி. மு. க. கிளையின் முதலாவது ஆண்டுவிழா 3-8-57 மாலை 6-30 மணிக்கு, எடப்பாளையம் தெருவில் சிறப்புற நடைபெற்றது.

அண்ணா அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

தோழர் கருணாகரன் தெலுங்கில் சொற்பொழிவாற்றினர்.

தோழர் ஆ. இராரன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, கழக இலட்சியத்தை விளக்கிப் பேசினர்.

பிறகு, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள தற்கால அரசியல் நிலை குறித்தும், தபால்-தந்தி ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தை விளக்கியும், அப்போராட்டத்துக்கு தி. மு. கழகம் நல்கும் ஆதரவு குறித்தும் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் அரியதோர் கருத்து விருந்து அளித்தார்கள்.

அண்ணா பேச எழுந்ததும் 27-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் தோழர் தனபால், அண்ணா அவர்களுக்கு வரவேற்பு மடல் படித்தளித்தார். அறிவியக்க மன்றம், ஆலந்தூர் தி. மு. க. கிளை ஆகியவை சார்பில் மலர் மாலைகளும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தோழர் மணிவேல் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறித் துண்டும் அண்ணா அவர்களுக்கு அணிவிக்கப்பட்டன.

அனைத்திந்திய ஸ்டேஷன்—மாஸ்டர்கள், உதவி ஸ்டேஷன்—மாஸ்டர்கள் சங்க சென்னை வட்டாரக் கிளை சார்பில் அண்ணா அவர்களுக்கும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கும் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றிகூறலுடன் விழா இனிது முடிந்தது.

மூன்று நாட்களில் 123 பேர் கைது

தமிழ்நாட்டில் சோஷலிஸ்டு கட்சி ஆர்ப்பாட்டம்

சென்னை, ஆக. 5—

தமிழ் நாட்டில் ஆகஸ்டு முதல் தேதியன்று, சோஷலிஸ்டுகள் துவங்கிய ‘சத்தியாக்கிரக’க் கிளர்ச்சியில், நேற்று மாலை கிடைத்த தகவல்படி 123 தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக கட்சித் தலைமை நிலயம் தெரிவித்திருக்கிறது.

சேலம், கோவை, தஞ்சை, சென்னை முதலிய நகரங்களில் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டவர்கள் கைது செய்யப்பட்டு, சிலர் காவல் வைக்கப்பட்டனர்; சிலர், ஒரு மாதம் வரை சிறைத் தண்டனை அளிக்கப்பட்டனர் என்று தெரியவருகிறது.

சோஷலிஸ்டுகள், ‘தமிழ் நாடு என்ற பெயர் வேண்டும்’ என்றும், மற்றும் 17 கோரிக்கைகளுக்காகவும் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்திவருவது தெரிந்ததே!

இவர்கள், மாவட்ட அதிகாரிகள் (கலெக்டர்கள்) அலுவலகத்தின்முன் கூடித்தான் இந்த ‘சத்தியாக்கிரக’த்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சேலத்தில்!

சேலம், ஆக. 4—

மூன்ருவது நாளாக சோஷலிஸ்டுக் கட்சியினர் சேலம் கலெக்டர் காரியாலயத்தின் முன்பு 3-ந் தேதியன்று மறியல் செய்தனர்.

போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருந்ததாக மறியல் செய்த தோழர் கே. எஸ். அங்கமுத்து முதலிய 24 பேர்களை போலீசார் கைது செய்தனர்.

அந்த 24 பேரும் சேலம் நகா ஸ்டேஷனரி சப்-மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டனர். 24 பேர்களுக்கும் தலா 2 வாரம் சாதாரண காவல் (சிறை) தண்டனை விதித்து மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார். (ந. கி.)

கேரளத்தில் நிலச் சீர்திருத்தம்

நிலவுடைமைக்கு உச்சவரம்பு நியாயவாரம் நிர்ணயம்

கோவில், மடாலயச் சொத்துக்களுக்கு விதிவிலக்கு ?

திருவனந்தபுரம், ஆக. 5—

கேரள சர்க்கார், நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்று கொண்டு வந்துள்ளனர்.

இந்தச் சட்டத்திற்கான நகல் மசோதா, மாநில கம்யூனிஸ்டுக் கட்சியின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது என்றும், இதனை டெல்லி சர்க்காருக்கு அவர்களின் அனுமதிக்காக அனுப்பிவைப்பார்கள் என்றும் தெரியவருகிறது.

நிலவுடைமைக்கு வரம்பு, நியாய வரம்பு முதலியனவற்றை இந்த மசோதா நிர்ணயிக்கிறது என்றும் தெரியவருகிறது.

10 ஆண்டுகள் நிரந்தரமாகக் குடியானவனுயிருக்கும் ஒரு விவசாயி, தான் விவசாயம் செய்து வரும் நிலத்தை, நிலப்பிரபுவிடமிருந்து விலைக்குப் பெற்றுக் கொண்டதாக சில நிபந்தனைகளுடன் கருதப்படும். இப்படி நிலமில்லாத விவசாயிகள் நிலம் பெறுகிற நாள், விவசாயிகள் நாளாகக் கொண்டாடப்படும் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சட்டத்திலிருந்து, காப்பி, இரப்பர், தேயிலை முதலிய தோட்டங்களுக்கு விலக்களிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

குடியானவன் நிலம் பெறும் உரிமையும், நிலவுடைமைக்கு உச்சகட்ட வரம்பும், தேவஸ்வம் மற்றும் மத நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பாதிக்காது என்றும் கூறப்படுகிறது.

உச்சவரம்பு

புஞ்சை மற்றும் தரிசு நிலங்களைப் பொறுத்து, இருபோக விளைச்சல் நிலமாக அல்லது தோட்டமாக 15 ஏகர்வரைதான் ஒருவர் வைத்துக்கொள்ளமுடியும் என்றும், நான்குபேர்களுக்கு மேல்கொண்ட குடும்பமானல் இந்த வரம்பு 30 ஏகராவாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

நிலத்தின் விளைச்சல், இருப்பிடம், இதர அம்சங்களை மனதில் கொண்டு சர்க்கார், இடத்திற்கு இடம் இந்த உச்சவரம்பினை தகுந்த முறையில் மாற்றி அமைத்துக்கொள்ளும் அதிகாரம் படைத்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

குறைந்தபட்சம்-அதிகப் பட்சம் என்ற அடிப்படையில், நியாயவாரமும் நிர்ணயிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

குமாரபாளையம் தி. மு. கழகத் துவக்கவிழா

என். வி. நடராசன் விளக்கம்

சேலம் மாவட்டம்-குமாரபாளையன் தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் 16—7—57 மாலை 5-மணிக்கு சிறப்புற நடைபெற்றது. ஏராளமான நெசவுத் தொழிலாளர்களும், தாய்மார்களும் கூட்டத்தில் திரண்டிருந்தனர்.

தோழர் சின்னண்ணன் தலைமை வகித்தார்.

இராசிபுரம் தோழர் கே.வி.கே. இராமசாமி அவர்கள் அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைத்துப் பேசினர்.

தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்து கொள்கையை விளக்கினர்.

இறுதியாகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கி வைத்து, நெசவுத் தொழிலாளர்களுக்குக் கழகம் ஆற்றியுள்ள தொண்டினையும், நெசவாளர் உள்ளிட்ட எல்லாத் தொழிலாளர்களுமே நிரந்தரமான உரிமை அடையவேண்டுமானல், திராவிடம் தன் உரிமை பெறவேண்டிய அவசியத்தையும், சட்டசபையில் கழகம் செய்துள்ள சேவையையும் காங்கிரஸ் ஆட்சியின் அநீதிகளையும் விளக்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

மாலை 4-மணிக்கு ஏராளமான நெசவாளர்களும், பொதுமக்களும் சூழ ஊர்வலம் ஒன்று புறப்பட்டு கழக அலுவலகத்தை வந்து முடிவுற்றது.

கிளைக் கழகங்களின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. கழகச் செயலாளர் திருமலை நன்றி கூறினர்.

இந்தியாவில் எவர்சில்வர் உற்பத்தித் தொழிற்சாலை

சில வெளிநாட்டு நிறுவனங்களுடன் ‘எவர் சில்வர்’ உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு இந்தியா முயற்சி செய்து வருவதாகவும், இதற்குத் தேவையான செலவுத் தொகைகளையும், பொருள்களையும் கடனாகப் பெற முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

கழகத்தோழர்கள் விடுதலை

அரசம்பட்டு வழக்கில் தீர்ப்பு

கள்ளக்குறிச்சி, ஆக. 5—

கள்ளக்குறிச்சி வட்டம் அரசம்பட்டு கிராமத்தில் நடந்த 6—3—57 அன்று திராவிடர் கழகச் சார்பில் நடத்தப்பட்ட காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலவரம் விளைவித்ததாக அரசம்பட்டு தி. மு. கழகத் தோழர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில், நம் கழகத் தோழர்கள் குற்றவாளிகளல்லர் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை 13 முறை ஒத்திவைக்கப்பட்டு, இறுதியாக 13—7—57 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

நம் கழகத் தோழர்கள் சார்பில் கள்ளக்குறிச்சி வழக்கறிஞர் திரு. டி. பி. தாத்தாச்சாரி அவர்கள் வழக்காடினர்; காங்கிரஸ் சார்பில் சங்கராபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் ராமுலு ஐயரும், பூமாலை பண்டயாச்சி என்பவரும் சாட்சியமளித்தனர்.

விடுதலையடைந்த கழகத் தோழர்கள்:—எம். முத்தையன் (செயலாளர், தி. மு. க.), க. பாண்டியன் (துணைச்செயலாளர்); கோ. பாண்டுரங்கன் (செயற்குழு உறுப்பினர்); ந. ராமு (செ. கு. உ.); மற்றும் உறுப்பினர்களான இரா. பழனி, ப. சீனுவாசன், வேலாயுதம், இலட்சுமணன், து. சிங்காரம்.

சென்னை கூட்டத்தில் அண்ணா விளக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இதை விடுத்து, அவர்கள் எங்களைப் பார்த்து கேள்வி கேட்க என்ன இருக்கிறது? மந்திரிகள் யாரும் எதுவும் கேட்காதிருக்கும்போது நாங்கள் எப்படிப் பதிலளிக்க முடியும்?

"அப்படி மந்திரியே எங்களைக் கேள்வி கேட்டு நாங்கள் பதிலளிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதனால் என்ன நஷ்டம்? நாட்டு மக்கள் பதிலளிக்கிறார்கள்—காலம் பதிலளிக்கிறது!

"அமைச்சர் சுப்பிரமணியம் எங்களைப் பார்த்து பேசிய பேச்சில், மூன்று வேண்டுகோள்கள் தொக்கி நின்றன; அதைக் கேள்விகளாகக் கருதிக் கொண்டால்கூட அதற்கும் நான் பதில் அளித்திருக்கிறேன் அமைச்சர், 'உங்களுடைய ஒத்துழைப்பு வேண்டும்' என்றார்; 'நாட்டுக்கு உகந்த நல்ல காரியங்களுக்கெல்லாம் எங்கள் ஒத்துழைப்புஎன்றும் உண்டு' என்றேன்; 'நாட்டுப் பிரிவினைத் திட்டத்தைக் கைவிட வேண்டும்' என்றார்; 'அது முடியாத காரியம்' என்று கூறிவிட்டேன். 'நாசவேலை வேண்டாம்' என்றார்; 'நாசவேலை எப்பொழுதுமே எங்களிடம் இருந்ததில்லை' என்று சொல்லி விட்டேன். இதற்குமேல் அமைச்சர் எந்தக் கேள்வியும் எழுப்பவுமில்லை—நானும் பதில் சொல்லவில்லை.

"அவர்கள் 150 பேர்—நாங்கள் 15 பேர். அவர்கள் கேள்வி கேட்டு அதற்கு நாங்கள் பதிலளிக்கவேண்டும் என்றால், இது யாருக்கு அவமானம்.

"நாங்கள் நாசவேலைக்காரர்கள் என்று மந்திரி சுப்பிரமணியம் சொன்னார். இந்தநேரத்தில் உங்களுக்கு ஒரு இரகசியத்தைச் சொல்லுகிறேன்.

"தேர்தல் நேரத்தில் இராச. கோபாலாச்சாரியார் என்னைச் சந்தித்துப் பேசியபோது என்னை ஒன்று கேட்டுக் கொண்டார்—'எங்களிடம் பிராமணத் துவேஷம் கிடையாது' என்று இந்த நேரத்தில் ஒரு அறிக்கை விடுங்கள்; இந்த ஒரே ஒரு காரியத்தை நீங்கள் செய்தால் போதும்' என்று! அதற்கு நான் சொன்னேன்—'எங்களிடம் எப்பொழுதுமே பிராமணத் துவேஷம் இருந்ததில்லையே' இந்த நேரத்தில் நான் இவ்வாறு அறிக்கை விடுத்தால் நாங்கள் இதற்கு முன்னால் பிராமணத் துவேஷிகளாக இருந்ததாக அல்லவா கருதப்படுவோம்' என்றேன். ஆச்சாரியார் பெரிய மனிதர்; அனுபவம் நிறைந்தவர் அல்லவா? எனவே அவர், 'அதுவும் நியாயந்தான்' என்றார்.

"மந்திரி சுப்பிரமண்யம் சொல்வதுபோல, நாங்கள் எப்பொழுது நாசவேலையில் ஈடுபட்டோம்?

"'இனி ஒழுங்காக நடந்துகொள்' என்று மாஜிஸ்திரேட் ஒருவனைப் பார்த்துச் சொன்னால், என்ன அர்த்தம்? 'ஏற்கனவே பல குற்றங்கள் புரிந்துவந்தவன்' என்பதுதானே; அமைச்சர், எதை எப்படிக் கேட்பது என்று தெரியாமலே எங்களை இவ்வாறு கேட்டுவிட்டார் என்பதை நானே சொல்ல வேண்டியுள்ளது. 'நாசவேலையை 10 வருடத்துக்கு நிறுத்தி வை' என்று அவர் சொல்லலாமா? 10 வருடம் என்றால், அதற்குப் பிறகு நாசவேலையை செய்யலாம்' என்றுதானே பொருள்? இப்படி, 'குட்டி குரைத்து நாயின் தலையில் வைப்பது'போல் இவர் பேசிவிட்டாரே என்பதற்காக அவர்பால் அனுதாபப்படுகிறேன்.

"முதலில் அவர், 'திராவிட நாடு பிரச்சினையை 10 வருடத்துக்கு ஒத்திவையுங்கள்' என்று எங்களைப் பார்த்துக் கேட்டுக்கொண்டார்; உடனே, அகில இந்தியாவிலிருந்தும் அவருக்கு எதிர்ப்பு கிளம்பியது; 'உன் கட்சியின் விரோதிகளை ஆதரிப்பது போல, தி. மு. கழகத்தின் நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை ஒத்துக்கொள்ளும் பாணியிலே நீ பேசலாமா? என்று, இந்தியா முழுவதிலுமுள்ள ஏடுகளெல்லாம் அவர்மீது சீறிப்பாய்ந்தன; அவரைக் கடிந்து, பிய்த்துக் தின்பது போல கண்டனகளைக் கொட்டின; உடனே அவர், 'நான் அப்படிச் சொல்லவில்லையே' என்று கூறி, தனது பேச்சுக்கு ஒரு புதுத் திருத்தம் தர முயன்றார்.

"'திராவிட நாடு பிரிவினையை நான் ஒத்திவைக்கச் சொல்லவில்லை; நாசவேலைகளைத் தான் ஒத்திவைக்கச் சொன்னேன்' என்று மழுப்பினார் அமைச்சர்; இது, முதல் தவறை மறைக்க எண்ணிச் செய்த இரண்டாவது தவறு ஆகும்!

"அவர் செய்த முதல் தவறு—'திராவிட நாடு கொள்கையை 10 வருடம் தள்ளி வைக்கவேண்டும்' என்று சொன்னது; இரண்டாவது தவறு—'நாசவேலையை 10 வருடம் தள்ளிவைக்கவேண்டும்' என்று சொன்னது.

"தேள் கொட்ட வந்தால், 'தேளே கொஞ்சம் பொறு; நான் சாப்பிடப் போகிறேன்; சாப்பிட்டபின் என்னைக் கொட்டலாம்' என்று கூறுவது எப்படியோ அப்படித்தான், 'நாசவேலையை இன்னும் பத்தாண்டு கழித்து செய்யலாம்; இப்பொழுது செய்யாதீர்கள்' என்பதும் ஆகும்.

"அமைச்சரின் இந்தக் கூற்றுக்கு, இந்தியன் பினல்கோடு சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் என்ன தண்டனை கிடைக்குமோ எனக்குத் தெரியாது. அவசரப்பட்டு அமைச்சர் இப்படி தவறு புரிவது ஆகாத காரியமாகும்.

"எனவே, கண்ணியத்தை உணர்ந்து காங்கிரஸ் நண்பர்களுக்குக் கூறிக் கொள்வது இதுதான்:—

"திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களின் நல்ல நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது; பிரும்மாண்டமான சக்தியைப் பெற்றிருக்கிறது; நாட்டுக்குரியநல்லஆக்கவேலைகளில் அது ஈடுபட்டிருக்கிறது; தி. மு. க. தோழர்கள் நல்ல வேலைகளில் கவனம் செலுத்துபவர்கள்; பம்பரம் போலச் சுற்றி காரியமாற்றக் கூடிய திறன் படைத்தவர்கள்; நாங்கள் சாமான்யர்கள்தான்—என்றாலும் எங்கள் பிரச்சினை பிரும்மாண்டமானது; நாட்டு மக்கள் எங்களிடம் நல்ல நம்பிக்கை கொண்டுவிட்டார்கள்.

"வீதியிலே செல்லும் வளையல்காரனை அழைத்தால் அவனை மதித்து அழைப்பதாகக் கருதமுடியாது; அவன் பெட்டியிலே உள்ள வளையல்களுக்குத்தான் மதிப்பு. எங்களுக்கு, மதிப்பு வளர்கிறது என்றால், அந்த மதிப்பு எங்களைச் சேர்ந்ததல்ல; எங்கள் பேச்சிலே பொதிந்துள்ள தத்துவத்துக்குத்தான் மக்கள் மதிப்புக் கொடுக்கிறார்கள்!

"எங்கள் கட்சித் தோழர்கள் பேசுகிற பேச்சை மாற்றுக் கட்சிக்காரர் ஒருவர் அரை மணி நேரம் பொறுமையுடன் கேட்டால், அவருக்குத் தலைசுற்றும்; நாங்கள் பேசுவது நியாயம் என்று தோன்றும்; எனவே, எங்களை வெறும் பேச்சுக்காரர்கள் என்று கூறி ஏளனம் செய்வோர், உண்மையை உணரவேண்டும். எங்களை எவ்வளவுதான் இழித்தும் பழித்தும் எதிரிகள் கூறினாலும் நாட்டு மக்கள், நல்ல இதயத்தை எங்களிடம் வைத்திருக்கிறார்கள்.

"நாங்கள் சொல்வதை இப்பொழுது மற்றவர்களும், மாற்றுக் கட்சிக்காரர்களும் உணர ஆரம்பித்துவிட்டார்கள். அண்மையில், ஆந்திர கவர்னராக இருந்து திட்டக்குழு உறுப்பினராக மாறும் திரு. திருவேதி அவர்களுக்கு ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. அதில் ஆந்திர அமைச்சர் கோபால ரெட்டியார் பேசும்போது கூறியதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"'இதுவரையில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. திட்டக் குழுவுக்கு நீங்கள் போனபிறகாவது தென்னாட்டுப் பொருளாதாரத் திட்ட வளர்ச்சியிலே கவனம் செலுத்துங்கள்' என்று கோபாலர், திரிவேதியை நோக்கிக் கூறியிருக்கிறார்.

"சட்டசபையிலே வடக்கு—தெற்கு என்று நாம் பேசும்போது 'வெறும் அடுக்கு மொழி' என்று கூறுகிறார்கள்; 'உண்மையிலேயே இது அடுக்கும் மொழிதான்; அடுக்காததல்ல; அடுக்கும்' என்றுதான் கோபால ரெட்டியாரும் கூறினார். அவரையே கேட்டுப்பாருங்கள்—இப்படி கூறுவது அடுக்குமா அடுக்காதா என்பதைக் கூறுவார். இது வேடிக்கையல்ல—பொருளாதார உண்மை; இந்த உண்மை இப்பொழுதுதான் நாட்டு மக்களிடம் குடியேறிவருகிறது.

"அண்மையிலே, தா காஸ்டா என்னும் பொருளாதார நிபுணர் சொன்னார்—'ரொம்ப காலமாகத் தென்னாடு பொருளாதாரத்துறையில் பின்னடைந்து கிடக்கிறது; தென்னாட்டை வாழ்விக்க ஒரு தனி நிதி ஒதுக்கவேண்டும்'—என்று! இதை, நம் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் சொன்னால் நிந்திக்கிறார்கள்; நடராசன் சொன்னால் கையாண்டி செய்கிறார்கள்! பி. ஜே. தாமஸ் என்னும் பாராளுமன்ற உறுப்பினர் கூடச் சொல்லி இருக்கிறார்—'வட நாடு வீங்குகிறது; தென்னாட்டு வளம்பெற வழி செய்யப்படவில்லை'—என்று!

"காங்கிரஸ்காரர்கள் கடைசிவரையில் இப்படியே நம் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல் இருப்பார்கள் என்று சொல்லி விட முடியாது. பாகிஸ்தான் பிரிவினை எப்படி நடந்தது? ஜின்னாவின் கோரிக்கைக்கும் இப்படித்தானே சொல்லி வந்தார்கள்?

"மரத்தில் ஏறியவன் மரத்திலேயே இருந்துவிட மாட்டான்; எப்பொழுதாவது கீழே இறங்கிதான் ஆகவேண்டும். போலீசாரைக் கண்ட திருடன் தப்பியோடி ஒரு மரத்தில் ஏறிவிட்டால் என்ன நடக்கும்? போலீஸ்காரனும் மரத்திலா ஏறுவான்? 'ஏறியவன் இறங்கித்தானே ஆகவேண்டும்?' என, மரத்தின் பக்கத்திலேயே அமர்ந்து விடுவான் போலீஸ்காரன்—புத்திசாலியாக உள்ள போலீஸ்காரன் செய்வது இதுதான். திருடனைத் துரத்திய அலுப்பில் போலீஸ்காரன் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்வான்; மரத்திலேயே இருந்து வேறு வழியில்லாமல் திருடன் கீழே குதிப்பான்.

"இதைப் போலவே — கோபுர உச்சியிலிருக்கும் ஆளும் கட்சியார் ஒரு நாளைக்கு கீழே இறங்கத்தான் போகிறார்கள்; அப்பொழுது நாங்கள் கேலி செய்ய மாட்டோம்; 'நீயும் நானும் ஒரே இனம்' என்று நாங்கள் இருவரும் இணைந்து பணியாற்றுவோம். அந்தக் காலம் வரும்வரை எங்கள் கால்களுக்கு வலிவு வேண்டும். அந்தக் காலம் வந்தால், 'நாங்களே திராவிட நாடு கேட்கிறோம் நீங்கள் எதற்கு? என்று அவர்கள் கூறுவார்கள்.

"பிரான்சிலே பதினாம்காம் லூயி காலத்தில் மன்னனின் கொடுங்கோல் தாங்காமல் கொதித்தெழுந்தனர் மக்கள்; கொடுமைக் கூடாரமான பாஸ்டில் சிறையை இடிக்க ஒரு புரட்சிப் படை வீதி வழியே பவனி வந்துகொண்டிருந்தது. 'பாஸ்டிலியை இடிப்போம்' என அப்படையினர் முழங்கிக்கொண்டு சென்றனர். அப்பொழுது எதிரிலே ஒரு சிறு பட்டாளம் வந்துகொண்டிருந்தது. புரட்சிப் பெரும் படையினரை நோக்கி, 'நீங்கள் எங்கே போகிறீர்கள்' என்று அந்த சிறிய பட்டாளம் கேட்டது; 'நாங்கள் பாஸ்டிலி சிறையை உடைக்கப் போகிறோம்' என்று பெரியபடை பதில் சொல்லிற்று; 'அதைத்தான் நாங்கள் இடித்துவிட்டு வருகிறோமே; நீங்கள் எதற்கு அங்கு செல்கிறீர்கள்' என்று கூறிற்று, சிறிய பட்டாளம்!

"இதைப்போலத்தான், 'நாங்களே திராவிட நாட்டைப் பிரித்துவிட்டோமே; நீங்கள் எதற்குப் போராடவேண்டும்?' என்று காங்கிரஸ்காரர்கள் கூறப்போகிறார்கள். அதுவரை நமக்கு வலிவுள்ள கால்கள் வேண்டும்.

"திராவிடநாடு பிரச்சினை என்பது 'இதய சுரம்' அல்ல; இன்னும் பத்தாண்டுக்காலம் இதைக் காப்பாற்றினால் போதும்; 10 ஆண்டுக்குள் நான் சொன்ன அந்த நல்லகாலம் பிறக்கத்தான் போகிறது. அந்த நல்லநாளை நாமெல்லாம் எதிர்பார்ப்போமாக!"

காஞ்சீபுரம் தொகுதி பொதுநல மாநாடு

முதலமைச்சர் காமராசர் தலைமையில் நடைபெற்றது

அண்ணா அவர்கள் வரவேற்புரையாற்றினர்

சென்னை, ஆக. 5—

காஞ்சீபுரம் தொகுதி கிராமங்களின் பொதுநல மாநாடு காஞ்சீபுரம், பரந்தூர் பிர்க்காவைச் சேர்ந்த தண்டலம் கிராமத்தில் சென்னை மாநில முதலமைச்சர் திரு. காமராசர் தலைமையில் இன்று நடைபெற்றது.

அண்ணா அவர்கள் மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினர். (பேச்சு விவரம் பின்னர் வெளிவரும்.)

முதலமைச்சரிடம் 200-க்கு மேற்பட்ட மனுக்கள் தரப்பட்டன.

மனுக்களைக் கவனித்து கூடுமானவரை எல்லாவற்றையும் நிறைவேற்றித்தர முதலமைச்சர் காமராசர் உறுதியளித்துள்ளார். (பேச்சு விவரம் பின்னர் வெளிவரும்)

தண்டலம் கிராமத்தின் சார்பில், காமராசர் அவர்களுக்கும், அண்ணா அவர்களுக்கும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

விவசாயிகள், முதலமைச்சருக்கு ஒரு வாழ்த்திதழ் வாசித்தளித்தனர்.

தோழர் எ. கே. தங்கவேலர் நன்றிநவில மாநாடு முடிவுபெற்றது.

கழகக் கூட்டம்

★

கீழ்வேளூர் :
கடைத் தெருவில்
8—8—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
க. அன்பழகன் எம்.எல்.ஏ.

மடுமாநகர் (20-வது வட்டம்) கலை வளர்ச்சி மன்ற 6-வது ஆண்டுத் துவக்க விழா

இரா. நெடுஞ்செழியன்
கலந்து கொள்வார்.

7—8—57 மாலை 6-மணிக்கு, சென்னை-பெரம்பூர் அடுத்த மடுமாநகர் (கேனன் அண்டு டங்கர்லி கம்பெனி அருகில்) மேற்படி மன்ற ஆண்டுவிழா தோழர் டி. வேணுகோபால் தலைமையில் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், டாக்டர் சத்தியவாணிமுத்து, தோழர் வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப் பயணம்

ஆகஸ்டு
10 : சென்னை-மைலாப்பூர்
12—13 : தேவபாண்டலம்
14 : கச்சிராபாளையம்
17—18 : திருவண்ணாமலை
மாநாடுகள்
24 : சென்னை-புதுவண்ணை
26 : மேலமாத்தூர்
27 : எளம்பலூர்
29 : வலசக்காடு
30 : வாண்டையாங்குப்பம்

டாக்டர் நடேசனர் இரவுப் பள்ளி துவக்கம்

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை மணவழகர் மன்றச் சார்பில் முருகேச முதலித் தெரு 2 எண்ணுள்ள மேற்படி மன்றக் கட்டிடத்தில், 7—8—57 மாலை 6-30 மணிக்கு, டாக்டர் சி. நடேசனர் இரவுப் பள்ளி துவக்கவிழா நடைபெறும்; தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்கள் பள்ளியைத் துவக்கி வைப்பார்.

திருக்குறள் வகுப்பு

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை, மணவழகர் மன்றச் சார்பில், 7—8—57 மாலை மேற்படி மன்றக் கட்டிடத்தில், புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்களால் திருக்குறள் வகுப்பு துவக்கி வைக்கப்படும்.

சென்னை பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்புவிழா ஆகஸ்டு 22-ந்தேதி சென்னை, சேப்பாக்கம் செனட் மண்டபத்தில் நடைபெறும். சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. பி. வி. இராசமன்னார் அவர்கள் பட்டமளிப்புவிழா உரை நிகழ்த்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ